

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போராட்டத்தின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த திருவாளர்கள் தாளமுத்து – நடராசன் ஆகியோரது நினைவிடத்தில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ப.தாயகம்கவி, ஆர்.டி.சேகர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி.சங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்!

# அன்றும் இன்றும் என்றும் இந்திக்கு இங்கே இடமில்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஜன. 26-

மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்: அன்றும் இன்றும் என்றும் இந்திக்கு இங்கே இடமில்லை!**

**மொழியை உயிராய் நேசிக்கும் ஒரு மாநிலம், இந்தித் திணிப்புக்கு எதிராக ஒன்றுதிரண்டு போராடியது. திணித்த ஒவ்வொரு முறையும் அதே வீரியத்தோடு போராடியது.**

**இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் உரிமையையும் அடையாளத்தையும் காத்தது.**

**தமிழுக்காகத் தங்கள் இன்னுயிரையே ஈந்த அந்தத் தியாகிகளை நன்றியோடு வணங்குகிறேன்.**

**மொழிப்போரில் இனி ஒரு உயிரும் போகாது; நம் தமிழுணர்வும் சாகாது! இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மொழிப் போர்களில் உயிர்ப்பலியான

# தியாகிகளை இந்நாளில் தமிழுணர்ச்சியோடு நினைவுகூர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.26-

மொழிப்போர்த் தியாகிகள் நினைவு நாளையொட்டி, தாளமுத்து - நடராசன் நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்பு, முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**வீரவணக்கம், வீரவணக்கம்! மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**

**1938-ஆம் ஆண்டு மொழிப்போர்க் களத்தின் முதற்கட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த நடராசன் தாளமுத்து ஆகியோருக்கு மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள அவர்களது நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தினேன். மொழிப்போர் வீராங்கனை அன்னை தருமாம்பாளுக்கும் நினைவஞ்சலி செலுத்தினேன்.**

**எழும்பூரில் அமைந்துள்ள தாளமுத்து நடராசன் மாளிகையில் திருவுருவச் சிலைகளையும் திறந்து வைத்தேன்.**

**மொழிப்போர்களில் உயிர்ப்பலியான மற்ற தியாகியரையும் இந்நாளில் தமிழுணர்ச்சியோடு நினைவுகூர்கிறேன்.**

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) தமிழ்மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டார். இப்பேரணியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.1.2026) தலைமைச் செயலகத்தில், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் நல சங்கம், தமிழ்நாடு சமூகநலத்துறை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஒன்றியம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவு பணியாளர்கள் பேரவை, தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம், தமிழ்நாடு சத்துணவு பணியாளர்கள் ஒன்றியம், தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர் நல சங்கம், தமிழ்நாடு அனைத்து சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், தமிழ் மாநில அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம், அங்கன்வாடி குழந்தை பராமரிப்பு பணியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஐ.சி.டி.எஸ். ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம், தமிழ்நாடு ஓய்வு பெற்ற அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு சத்துணவு பணியாளர்கள் ஒன்றியம், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம், தமிழ்நாடு அனைத்து சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதியர் சங்கம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவு பணியாளர் நல சங்கம், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். சத்துணவுப் பணியாளர் பேரவை, தமிழ்நாடு அரசு சத்துணவு பணியாளர் ஒன்றியம், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, பி.கீதா ஜீவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.


